# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (13.09.2023 முதல் 17.09.2023)

**அறிக்கைஎண் 073/2023** **தேதி.12.09.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 08.09.23 முதல் 11.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-25 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (08.09.2023 முதல் 11.09.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 17.09.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/09 | 09/09 | 10/09 | 11/09 | தேதி | நாள்-1 13/09 | நாள்-2 14/09 | நாள்-3 15/09 | நாள்-4 16/09 | நாள்-5 17/09 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 5 | 2 | 2 | 4 | 6 |
| 31 | 31 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 31 | 30 | 30 |
| 22 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 20 | 20 | 20 |
| 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 7 | 8 | 8 |
| 82 | 75 | 85 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 76 | 64 | 64 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 40 | 40 | 40 |
| 25 | 23 | 22 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 16 | 16 | 16 | 20 |
| 230 | 200 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (13.09.2023 முதல் 17.09.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம்

மணிக்கு 14-20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **13-09-2023** | 3.0 | 4.0 | 6.0 | 3.0 | 4.0 | 5.0 | 4.0 | 4.0 | 4.0 | 3.0 | 6.0 | 3.0 | 3.0 |
| **14-09-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| **15-09-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| **16-09-2023** | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| **17-09-2023** | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசான மழை மற்றும் மேற்குதொடர்ச்சி மழையடிவாரங்களில் மிதமானது முதல் கனமழையும், 10-20 கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>கரும்பில் நுனிகருகல் நோய் காணப்பட்டால், புரோபிகோனசோல் @ 1மிலி/லிட்டர் + இமிடாகுளோபிரிட் 17.5 SL @ 0.3மிலி/லிட்டர் என்ற அளவில் தெளித்து பொக்கோ போயிங் நோய் வருவதை தடுக்கலாம். |
| பருத்தி | பூக்கும் பருவம் | மழை எதிர்பார்க்கபடுவதால் மானாவாரி மற்றும் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கு தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும். பருத்தியில் செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல்உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும்.<br>பருத்தியில் இலைக்கருகல் நோயின் அறிகுறி தென்படின், |

| | | |
|---|---|---|
| | | மேன்கோசெப் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 14 - 20 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>வாழையில் சிகாடோகா இலைப்புள்ளி நோயை மேலாண்மை செய்ய புரபிகோனசோல் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி மருந்துடன் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |
| கால்நடை | | கொசுக்களை தடுக்க கால் நடை கொட்டகைகளில் தண்ணீர் தேங்காமல் பாதுகாக்கவும். |

### குறுஞ்செய்தி

- மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**